விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 062 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 07 சனிக்கிழமை (19.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## இரண்டு கட்டங்களாக மின்வெட்டு அமுலானது

பக்கம் 5ஆ பார்க்க

## பாண் ஒன்றின் விலை ரூ.400 ஆக அதிகரிக்கும்

பக்கம் 5ஆ பார்க்க

பயங்கரவாதச் சட்டத்தை நீக்குக

## சமயத் தலைவர்கள் யாழில் கையெழுத்து

பக்கம் 3ஆ பார்க்க

ஈஸ்டர் தாக்குதல் வழக்கிலிருந்து

# பூஜித, ஹேமசிறி நேற்று விடுதலை

### கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி



(கொழும்பு)
ஈஸ்டர் தாக்குதல் வழக்கிலிருந்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜய சுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேம சிறி பெர்னாண்டோ ஆகியோரை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.
(15ஆம் பக்கம் பார்க்க)




பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு

# சந்திரிகா, சம்பந்தன் கொழும்பில் கையெழுத்து



(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தனும் நேற்று கையெழுத்திட்டனர்.
(15ஆம் பக்கம் பார்க்க)



கொரோனாவால்

## 23 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 15

## கிளிநொச்சியில் நாளை பேரணி

(கிளிநொச்சி)
காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் மாபெரும் போராட்டமொன்று இடம்பெறவுள்ளது. நாளை காலை 10 மணிக்கு கிளி 15

மன்னார் திருக்கேதீஸ்வர விவகாரம் தொடர்பாக

## எம்.பிக்கள், தமிழ்க் கட்சித் தலைவர்களை ஓரணியில் திரட்டுவதற்கு முயற்சி!

(யாழ்ப்பாணம்)
திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி, மன்னார் திருக்கேதீஸ்வர விவகாரங்கள் தொடர்பாக தமிழ் சைவப் பேரவை, சைவ மகா சபை உயர்மட்ட குழுவினர் யாழ். 15



## ஹெரோயின் வாங்குவதற்கு வீடு உடைத்துக் கொள்ளை

### யாழில் 3 பேர் கைது

(யாழ்ப்பாணம்)
வீடு உடைத்து பெருமளவு நகைகளை கொள்ளையடித்து ஹெரோயின் வாங்கிய பிரதான சந்தேகநபர் உட்பட மூவரை நகைகளுடன் கைது செய்தனர் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர். 15

## யாழில் அதிகரிக்கும் தொடர் கொள்ளைகள்

### மக்கள் பெரும் அச்சத்தில்

(அராலி)
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தன்கேணி பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்த 1 ½ பவுண் தோடு, சைக்கிள். 16

## சர்வதேச நாணய நிதியத்தை நாடும் நோக்கம் கிடையாது

### அரசாங்கம் அறிவிப்பு

(அநுராதபுரம்)
பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தை நாடும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது என காணி விவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.
அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற 15

நாட்டில் மேலும்

## +1,282 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
கொரோனாத்தொற்று உறுதியான மேலும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஊடக அமைச்சரின் கூட்டத்தில்

# யாழில் கறுப்புப் பட்டி அணிந்து ஊடகவியலாளர்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வெகுசன ஊடக துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்து கொண்ட கூட்டத்தில் கருப்பு பட்டி அணிந்து ஊடகவியலாளர்கள் அடையாள எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் வெகுசன ஊடக துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்குமிடையிலான சினேகபூர்வ சந்திப்பு ஒன்றும் நேற்று இடம்பெற்றிருந்தது.

இதன்போது குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட ஊடக்வியலாளர்கள் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி கறுப்பு பட்டி அணிந்து எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ஞா-33)

# வடக்கில் மலேரியா தொற்று பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் தற்பொழுது மலேரியா நோய் பரவும் அனர்த்த நிலையுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

நான்கு வார காலத்திற்குள் 4 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒரு நோயாளரை அடையாளம் காண்பதன் மூலம் அது ஆயிரம் நோயாளர்களின் ஆரம்பமாக அமையும் என்று சுகாதார அமைச்சின் மலேரியா நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விஷேட வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார். (ஞா)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள BENLY 125 மோட்டார் சைக்கிள். JAPAN ASIA, Tomahawk, LUMALA ஆகிய 3 துவிச்சக்கர வண்டிகளும் விற்பனைக்கு உண்டு.

(10265)

070 490 9483

## சேல்ஸ்மான் தேவை

யாழ். நகரில் இயங்கும். எமது புடைவை நிறுவனத்திற்கு புடைவை அனுபவம் உள்ள ஆண் / பெண் ஊழியர்கள் தேவை.

(10266)

சிவகணேசன் ரெக்ஸ்
இல. 41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. க. மதன் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி கதிரிப்பிள்ளை நாகரத்தினம்

பிறப்பு: 01.11.1952 இறப்பு: 17.02.2022

அவர்கள் 17.02.2022 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஏழாலை மகா வித்தியாலயம்

(10264)

## உடனடி வேலை வாய்ப்பு

தயாரித்த சிறுவர், சிறுமியர், நவநாகரீக நங்கைகளின் ஆடைகளை விற்பனை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

- கணக்கு லிகிதர் (A/C CLERK)
- பணியாளர்களின் மேற்பார்வையாளர் (Supervisor)

முன்அனுபவம், கல்வி அறிவு க.பொ.த உயர்தரம், சாதாரண தரம் படித்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுபவம் இல்லாதவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் 20.02.2022 இற்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு : யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விண்ணப்பித்தல் நல்லது.

(10232)

- 074 099 1852

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 21.01.2022 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

கணபதி மார்க்கண்டு

தோற்றம் 10 . 06 . 1931

மறைவு 21 . 01 . 2022

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.02.2022) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியோர், தொலைபேசியூடாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தோர், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், பிரசுரங்கள், பதாதைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர், அஞ்சலியுரை நிகழ்த்தியோர், இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டோர் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

கருணாகரப்பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

(10238)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பாடசாலை பிள்ளை போல நீதி அமைச்சரின் கருத்து உள்ளது

## அருட்தந்தை சக்திவேல் காட்டம்

(நெளுக்குளம்)

**பாலர் பாடசாலை பிள்ளை போல் நீதி அமைச்சர் வெளியிடும் கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நீதி அமைச்சர் அலி சப்ரி கடந்த ஞாயிறுக்கிழமை பத்திரிகை ஒன்றிற்கு வழங்கியிருந்த தனிப்பட்ட பேட்டியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும், யுத்தம் தொடர்பிலும் உண்மைகளை வெளிப்படுத்தி ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ள விடயத்தினை சர்வதேச சமூகம் ஏற்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு உட்படுத்த வேண்டும். அத்துடன் தமிழர்கள் மீது முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்பதோடு அவரின் கூற்று தமிழர்களை தொடர் போராட்டத்திற்கே தள்ளியுள்ளது எனலாம்.

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில் ஆட்சியாளர்களின் "நீதிக்கான அணுகுதல்" வேலைத்திட்டம் மூலம் சர்வதேசத்தின் கண்களில் மண்ணைத்தூவ எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது.

இதுவரை காலமும் ஆட்சியாளர்கள் வடக்கில் "யுத்தம் நடைபெறவில்லை. அங்கு நடந்தது மக்களை மீட்கும் மனிதாபிமான இராணுவ நடவடிக்கையே" எனக் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் நீதியமைச்சர் யுத்தம் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் "உங்கள் உதவிகளும், சலுகைகளும், மரண சான்றிதழ்களும் எங்கள் உயிரான உறவுகளின் உயிருக்கு ஈடாகுமா? அவர்களுக்கு என்ன நடந்தது? மரண சான்றிதழ் வழங்க முன்வரும் நீங்கள் அவர்கள் மரணம் அடைந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் மரணத்திற்கு அல்லது கொலைகளுக்கு யார் காரணம்? என கேட்பதை நீதியமைச்சர் அரசியல் எனக்கூறி ஆட்சியாளர்களின் அரசியலை மூடி மறைக்க முயல்கின்றார்.

நீதி அமைச்சரின் செவ்வி தமிழர்களை பலமான போராட்டத்திற்கு தள்ளியுள்ளது. இதனோடு நீதியமைச்சர் வட கொரியாவில் இருந்து யுத்தத்திற்கான ஆயுதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது எனும் கூற்றையும் அடிப்படையாக வைத்து ஐ.நா. மனித உரிமைப் பேரவை சர்வதேச சக்திகளின் அரசியலுக்குள் சிக்கி விடாது தொடர்ந்து இன அழிப்பை சந்தித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு உட்படுத்தவும், சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தவும் அரசியல் தீர்வுக்கு வழி வகுக்க வேண்டும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-299)

## மீள் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பொறியியல் தொழில்நுட்ப இளமாணி கற்கைநெறி, விஞ்ஞான மாணி கற்கை நெறி ஆகியவற்றுக்கான மீள் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொறியியல் தொழில்நுட்ப இளமாணி கற்கை நெறிக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணித பிரிவில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், விஞ்ஞானமாணி கற்கை நெறிக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணித, உயிரியல் பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். நாளை முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது யாழ்.பிராந்திய நிலையத்தின் ஊடாகவோ விண்ணப்பிக்க முடியும் என இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)

## 47 இந்திய மீனவர்கள் சென்னை திரும்பினர்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி ஊடுருவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 47 இந்திய மீனவர்கள் நேற்றுக் காலை சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு விமானம்மூலம் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தத் தகவலை இலங்கைக்கான இந்தியத் தூதரகம் நேற்றுக் காலை தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ளது. (நி)

## அரசாங்க வெளியீட்டு பணியகத்தின் ஏழாவது அலுவலகம் யாழ்ப்பாணத்தில்





(யாழ்ப்பாணம்)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரசாங்க வெளியீட்டு பணியகம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்க வெளியீட்டு பணியகத்தின் ஏழாவது மாவட்ட அலுவலகமாக இவ் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமைவதுடன் இதற்கு முன்னர் கண்டி, காலி, அனுராதபுரம், வவுனியா, பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இப்பணியகம் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகளை வார நாட்களில் இங்கு பெற்றுக் கொள்ள முடியும்.

இந் நிகழ்வில் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சுரேன் ராகவன் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், அரசாங்க தகவல் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும்கலந்துகொண்டனர். (18-33)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கிலிருந்து ஹேமசிறி விடுதலை


(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.



கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி யாழில் சமயத் தலைவர்கள் கையெழுத்து



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி யாழில் சமயத் தலைவர்கள் கைச்சாத திட்டனர்.


நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்டின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலா நிதி ஆறுதிருமுருகன், யாழ். மாவட்ட ஜமையத்துல் உலமா தலைவர் அல்ஹச் அப்துல் அஸீஸ் ஆகியோர் நேற்று கையெழுத்திட்டனர்.

(நி-18-33-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது இன்னிங்ஸிலும் தென்னாபிரிக்கா தடுமாற்றம்

# நியூஸிலாந்து 353 ஓட்டங்கள் முன்னிலை



நியூஸிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின், இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்கா அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 34 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், வெண்டர் டுஸன் 9 ஓட்டங்களுடனும், டெம்பா பவுமா 22 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பீடுகையில், தென்னாபிரிக்கா அணி 353 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

கிறிஸ்ட்சேர்ச் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, 95 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சுபைர் ஹம்சா 25 வெர்ரின்னே 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், மெட் ஹென்றி 7 விக்கெட்டுகளையும் டிம் சவுத்தீ, கெய்ல் ஜேமிஸன், நெய்ல் வாக்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 482 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.


இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஹென்றி நிக்கோல்ஸ் 105 ஓட்டங்களையும் டொம் பிளென்டல் 96 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், ஒலிவியர் 3 விக்கெட்டுகளையும் ரபாடா, மார்கோ ஜென்சன் மற்றும் மார்க்ரம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் க்ளென்டன் ஸ்டூர்மேன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, 387 ஓட்டங்கள் பின்னிலையின் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, நேற்றைய இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 34 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இன்னமும் 7 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்கா அணி இன்று தொடரவுள்ளது. (6)

# தேசிய மட்ட ஹொக்கி தொடர் நாளை ஆரம்பம்




இலங்கை ஹொக்கி சங்கம் நடத்தும் தமது அங்கத்துவ கழகங்களுக்கிடையிலான தேசிய மட்ட ஹொக்கி தொடர் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த யாழ். ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வெனப்புவ ஹொக்கி கழக அணி மோதவுள்ளது. (6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2517

### பிரியங்கா



ஆறு மணிக்கு மேல நான் எங்கயும் விளையாட வரமாட்டேன்

### நிசங்கன்

சின்ன வயசுல துரத்தி துரத்தி பிடிக்கும் போது தப்பித்து ஓடிடு




இப்போ பைக்ல போகும் நீயா வந்து மோதி செத்து போறயே வெக்கமா இல்ல உனக்கு

### யாமினி

மனசு சரியில்லை... நான் அப்புறம் பேசுறேன் எனும் உறவை விட...



மனசு சரியில்லை... அதான் உன்கிட்ட பேசுறேன் எனும் உறவே வலிமையானது

### திலக்ஷன்


பெண்பிள்ளைகளை பெற்ற எல்லா அப்பாக்களும் அதிஷ்டசாலிகளே..



ஏனென்றால் அவர்களுக்கு மட்டுமே இரண்டு தாய்

### தர்ஷனா

லவ் பண்றவனுகளே லவ்வர்ஸ் டே க்கு ஒரு ஸ்டேட்டஸ்ட் போடுறாங்க



ஆளே இல்லாத இவன் எதுக்கு இத்தனை லவ் ஸ்டேட்டஸ்ட் போடுறான்

### பவன்



சிங்கப்பூரில் நெடுஞ்சாலையினால் மிருகங்களின் சுதந்திரத்திற்கு எந்த தடையும் வராமல் இருக்க அமைக்கப்பட்டு உள்ள மிருகங்கள் கடந்து செல்லும் சுதந்திர வழி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் இரண்டு கட்டங்களாக மின்வெட்டு

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியில் இரண்டு கட்டங்களாக மின் வெட்டை அமுல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு, இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.**

அதற்கமைய, பிற்பகல் 2.30 முதல் மாலை 6.30 வரையான காலப்பகுதியில் ஒரு மணித்தியாலத்திற்கும், மாலை 6.30 தொடக்கம் இரவு 10.30 வரையான காலப்பகுதியில் 45 நிமிடங்களுக்கும் மின்வெட்டு அமுல்படுத்தப் படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் A,B, C,D என நான்கு வலயங்களின் கீழ் மின்வெட்டு அமுல் படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருள் இன்மையால் 400 மெகாவாட் மின்னுற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய மின்பிறப்பாக்கிகள் செயற்பட வில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இதனால் எதிர்பாராத விதமாக மின்வெட்டை அமுல்படுத்த வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# கோதுமை மாவுக்கு கடும் தட்டுப்பாடு
## பாணின் விலை 400 ரூபாவாக அதிகரிக்கலாம்
### பேக்கரி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

நாட்டில் பாணின் விலையானது 400 ரூபாவாகக் கூட அதிகரிக்கலாம் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

நாட்டில் கோதுமை மாவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள பேக்கரிகளுக்குத் தேவையான மாவில் 75% மாத்திரமே பெறப்படுகிறது. இதனால் பேக்கரி உற்பத்திகள் குறைக்கப்பட்டுள்ளதால் பேக்கரித் தொழில் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

அதேவேளை பேக்கரி உரிமையாளர்கள் அவற்றின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று ஒரு இறாத்தல் பாண் 100 ரூபாவுக்கு விற்கப்பட்டாலும், எதிர்காலத்தில் அதனை 300, 400 ரூபாவுக்குக் கூட வாங்க முடியாத நிலை ஏற்படும்.

இதனால் கோதுமை மாவுக்கான கட்டுப்பாட்டு விலையை விரைவில் நடைமுறைப்படுத்தி மாவின் விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தலையிட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

### இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில்
# குழந்தைகளுக்கான உணவுப் பாத்திரங்களில் புற்றுநோயை உண்டாக்கும் இரசாயனம்
## சர்வதேச ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

குழந்தைகளுக்கான பால் மற்றும் ஏனைய உணவுகள் வழங்கப்படும் போத்தல்கள் மற்றும் உணவு தட்டுகளில் பிஸ்பினோல் எனப்படும் புற்று நோயை உண்டாக்கும் இரசாயனம் உள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது. சுற்றுச்சூழல் நீதிக்கான கேந்திரம் ஒத்துழைப்பில், தேசிய ஊழல் ஒழிப்பு வலையமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக இலங்கை, பங்களாதேஷ், சீனா, பூட்டான், மலேசியா, இந்தோனேஷியா, ரஷ்யா மற்றும் தன்சானியா ஆகிய நாடுகளில் இந்த பால் போத்தல்கள் மற்றும் உணவு தட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஐரோப்பிய சங்கத்தின் உறுப்பு நாடுகளிலும், மலேசியா, சீனா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் குழந்தைகளுக்கான உணவு பாத்திரங்களில் குறித்த இரசாயனங்களை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் பெறப்பட்ட மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த பிஸ்பினோல் என்ற புற்றுநோய் உண்டாக்கும் இரசாயனம் உயர் மட்டத்தில் அடங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அவை தொடர்ந்தும் பாவனையில் உள்ளதாக சுற்றுச்சூழல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் சலனி ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

பிஸ்பினோல் என்ற புற்று நோய் காரணி, பாலியல் குறைபாட்டை ஏற்படுத்துவதுடன், நீரிழிவு போன்ற பல உடல் நலப் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும் இரசாயனமாகும்.

அவ்வாறே, இவை ஹோர்மோன் தொழிற்பாட்டுக்கும் தடையை ஏற்படுத்துவதாக ஐரோப்பிய சங்கத்தின் உறுப்பு நாடுகள் தெரிவித்துள்ளன.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் சட்டப்பூர்வமாக இதனையொரு அபாயகரமான இரசாயனமாக ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர விடுதலை

(கொழும்பு)

ஏப்ரல் 21 பயங்கரவாத குண்டுத் தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட உள்ளதாக, துல்லியமான புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும்; அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மூலம், கடமையை நிறைவேற்றத் தவறியமை உள்ளிட்ட 855 குற்றச்சாட்டின் கீழ், சட்டமா அதிபரால், அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உரும்பிராயில் இரத்ததான முகாம்

(குப்பிழான்)

உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு, உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலையம், உரும்பிராய் மேற்கு இளைஞர் கழகம் என்பன இணைந்து நடத்தும் வருடாந்த இரத்ததான முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (நி-18)

# இராசிபலன்

19.02.2022
மாசி 07, சனிக்கிழமை
திருதியை முன்னிரவு 10.44 மணிவரை
உத்தரம் பிற்பகல் 5.40 மணிவரை
சுபநேரம் - 3.32-5.02 மணிவரை
இராகுகாலம் - 9.32-11.02 மணிவரை
திருவள்ளுவர் குருபூசை
சந்திராஷ்டமம்- அவிட்டம், சதயம்

**வளவன்**


மேஷம்

மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள்,உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.


ரிஷபம்

பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மிதுனம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வெளியூர்த் தொடர்புகள அனுகூலம் தரும்.


கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள்உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாக்கு மேன்மையுண்டு.


கன்னி

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


துலாம்

காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கே யென நினைக்க வேண்டிய நாள், சஞ்சலங்கள் சற்று கூடும்.


விருச்சிகம்

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.


தனுசு

பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு, செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.


மகரம்

குறை சொன்னவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் பெருக வழியமைப்பீர்கள்.


கும்பம்

வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், மருத்துவ செலவுகள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட வேண்டிய நாள்.


மீனம்

உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி சகல நோய்களையும் தீர்க்கும் அற்புத மருந்து

# வடக்கின் பெருமைகளில் ஒன்றே மயிலிட்டி துறைமுகம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புகழாரம்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவமிக்கதாகவும் வடபகுதி கடற்றொழிலாளர்களின் பொருளாதாரமிக்கதாகவும் விளங்கிய மயிலிட்டி துறைமுகத்தை மீண்டும் அதே பெருமையுடன் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து புனரமைப்பு பணிகளை அங்குரார்ப்பனம் செய்து வைத்தபின் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையின் முதன்மையான துறைமுகமான இந்த துறைமுகம் இலங்கையின் மீன்பிடி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்து வந்தது. ஆனாலும் கடந்தகாலத்தில் நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக துரதிஸ்டவசமாக அதில் பாரிய பின்னடைவை சந்திக்க நேரிட்டது. ஆனாலும் அந்த பாதிப்பிலிருந்து இந்த துறைமுகத்தை தூக்கி நிறுத்தும் முகமாகவே அதன் அபிவிருத்திக்கான இரண்டாம் கட்ட பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

இதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எமது மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மயிலிட்டி துறைமுகத்தை மட்டுமல்லாது வடக்கில் பருத்தித்துறை மன்னார் பேசலை மற்றும் யாழ்ப்பாணம் குருநகர் ஆகிய மூன்று துறைமுகங்களையும் அமைப்பது தொடர்பிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் தெரிவித்தார்.

சுமார் 304 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள குறித்த அபிவிருத்திப் பணிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு, கடற்றொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜயந்த சந்திர சோம தலைமையில் நடைபெற்றதுடன் பாராளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன், இந்திய தூதரக பிரதி தூதர் ராஜேஸ் நடராஜ், கடற்படையின் வடக்கு பிரதானி, மாவட்ட செயலாளர் மகேசன் மற்றும் துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-33)

# சட்ட விரோத மது விற்பனை முதியவர் ஒருவர் கைது



(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - களபூமி பகுதியில் பெருமளவு சாராய போத்தல்களுடன் 64 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சித்தங்கேணி மதுவரி நிலையத்தினர் இணைந்து இக்கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-104)

# யாழ்.மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் திண்மக்கழிவகற்றலில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் யாழ். மாநகர சபையில் புதிதாக நியமனம் பெற்றுள்ள வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் இணைத்து அதனை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 16 மற்றும் 17 ஆம் திகதி யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபையின் உறுப்பினர்கள், யாழ்.மாநகரசபை செயலாளர் மற்றும் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரட்டு மைய சிரேஷ்ட மேற்பார்வையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாநகரத்தில் கடந்த 15 நாட்கள் நடைபெற்ற திண்மகழிவகற்றல் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு அதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (க-33-18)

# 'மரிய சேவியர் அடிகள்' ஒரு பன்முகப் பார்வை

## ஆய்வரங்கம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக "கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் ஒன்பதாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முன்னாள் தலைவரும், ஓய்வுநிலைப் பேராசிரியருமான கலாநிதி ஏ. என்.கிருஷ்ணவேணி தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் "நீ.மரியசேவியர் அடிகளின் இலக்கிய நாடக எழுத்துருக்கள் மீதான பார்வை" என்னும் தலைப்பில் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய ஆசிரியரும், திருமறைக் கலாமன்ற நாடகப் பொறுப்பாளருமான திருமதி வைதேகி செல்மர் எமில் ஆய்வினை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 789364 4809, கடவுச் சொல் cpa என்பதனூடாக இந்நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# வாராந்த அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் மெய்நிகர் இணைய வழியில் நடத்தப்படும் வாராந்த அரங்கக் கதையாடல் 84 ஆவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் பண்டிதர் செ.த.குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் "எஸ்.ரி. அருள்குமரனின் அரங்கப் பார்வைகள் நூல்" அறிமுகம் நிகழ்வு இடம்பெறவுள்ளது

இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி 64 73348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# தங்கச் சங்கிலி அபகரிப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த பெண்ணை தள்ளி விழுத்தி விட்டு கொள்ளையர்கள் ஒரு பவுண் நிறை கொண்ட சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது காயமடைந்த பெண் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-30)

# சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரும் நிகழ்வு நடைபெறும். (க)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 500 | 500 |
| தக்காளி | 150 | 150 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 50 |
| கோவா | 200 | 180 | 200 | 200 |
| கரட் | 400 | 550 | 550 | 550 |
| பூசணி | 140 | 150 | 180 | 200 |
| புடோல் | 180 | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 280 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 180 |
| பாகற்காய் | 250 | 200 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 240 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 280 | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 150 | 240 | 240 | 240 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | - | 1000 | 1200 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 120 | 150 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 60 | 100 | - | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | - | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் நலனே இந்தியாவின் பாதுகாப்பு நலன்

## நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவிப்பு



(லண்டன்)

இலங்கைக்கு 900 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா கடனாக வழங்கவுள்ள நிலையில் செயலாக்க உறுதிப்பாட்டின் அடிப்படையில் இக் கடன் வழங்கப்பட வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ டில்லி செல்லவுள்ள நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்திலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 14 ஆம் சரத்தில் குறிப்பிட்டவாறு இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதனை உறுதியான செயலாக்க உத்தரவாதத்துடனேயே இலங்கைக்கான எந்தவொரு உதவிகளும் வழங்கப்பட வேண்டும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைச் செயலாக்க வேண்டும்.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயக பகுதியில் சிங்களவர் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும்.

தமிழர் பகுதிகளுடன் சிங்களக் கிராமங்களை இணைத்து தமிழர் பகுதிகளின் எல்லை வரையறை செய்வதை நிறுத்த வேண்டும் போன்ற விடயங்களை செயற்படுத்தக் கோரி இந்தியா இலங்கைக்கான நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வட்டவளையில் புகையிரதம் தடம்புரள்வு மலையகத்திற்கான சேவைகள் பாதிப்பு

(கண்டி)

கண்டியிலிருந்து பதுளையை நோக்கி புறப்பட்ட சரக்கு புகையிரதம் வட்டவளை ரொசல்லை பகுதியில் தடம்புரண்டதில் மலையகத்திற்கான புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த புகையிரதத்தில் பதுளை நோக்கி பயணித்த பயணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாகினர்.

குறித்த புகையிரம் தடம்புரண்டதன் காரணமாக புகையிரத சமிக்ஞை கட்டுப்பாட்டு தொகுதிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரயில் பயணச்சீட்டுகள் ஒன்லைனில் பதிவு செய்யலாம்

(கொழும்பு)

பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் ஒன்லைனில் ரயில் பயணச் சீட்டுகளை வழங்க இலங்கை ரயில்வே திணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று பயணிகள் இணையத்தில் பயணச்சீட்டை முன் பதிவு செய்ய முடியும் அல்லது கையடக்க தொலைபேசி செயலி ஊடாக ஆசனத்தை முன்பதிவு செய்ய முடியும் என ரயில்வே சேவையின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இதற்கான கையடக்கத் தொலைபேசி செயலி விரைவில் அறிமுகப்படுத்தப்படும். பயணிகளின் தேவைக்கு ஏற்ப எதிர்காலத்தில் இந்த வசதி கிடைக்கும். பயணிகள் கடன் அட்டைகளை பயன்படுத்தியும் பணம் செலுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

(கொழும்பு)

நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திடீர் விஜயம் மேற்கொண்டார்.

நீர், சூரிய ஒளி மற்றும் காற்று போன்றவற்றை மின் உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்காக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடினார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா:56 ½ சூரி 1 செவ் 6இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:உயர்தரம் (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு வெளிநாடு<br>தொ.இ: B/12302 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>கி.பா: சூரி.செவ் 2 இல்<br>உயரம்:5'7"<br>தகைமைதொழில்:BA பட்டதாரி கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/8745 |
| பிறப்பு: 1988இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 4<br>கி.பா:29½சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: production Assistance (கனடா)PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு உள்நாடு<br>தொ.இ: B/12304 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: புரட்டாதி 1<br>கி.பா:24 சூரி.செவ் 6 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: BAபட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உயர் பதவி or அரச தொழில் அரச தனியர் உத்தியோகம்<br>தொ.இ:G/8748 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா :21சூரி 9 செவ் 11இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:civil Engineering TOConscription(சொந்தம்)<br>எதிர்பார்ப்பு:அரசதனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12305 | பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா:49 ¼ சூரி.செவ் 7இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: BBM Book Keeper<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/8751 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 45 சூரி 2 செவ் 3இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L பெயிண்ட் கொன்றாக் (கட்டாரில் இருந்து வந்தவர்)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12306 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 31 சூரி 7 செவ் 5 இல் உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: MBA B.E(CSE) தனியர் தொழில் சென்னை<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8757 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# டவர் மண்டப அரங்க மன்றம் நடத்தும் நாடகப் பாடசாலை யாழில் ஆரம்பம்

டவர் நாடகப் பாடசாலையினுடாக அரங்கியல் இரு ஆண்டு முழு நேர உயர் டிப்ளோமா (நாடக அரங்கியற் கல்விமாணி கற்கை நெறிக்கு இட்டுச் செல்லக்கூடிய இரு ஆண்டு முழு நேர) பாட நெறியினை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சண்டிலிப்பாய் கலாச்சார மத்திய நிலையத்தில் ஆரம்பிப்பதற்கான அனைத்து விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

டவர் நாடகப் பாடசாலையினூடாக 1997 ஆம் ஆண்டு நாடகம் மற்றும் அரங்கக் கலைகள் ஓராண்டு முழு நேர டிப்ளோமா சிங்கள மொழி மூலமாக மருதாணை சரவவிபாயாவில் தொடங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைந்து நாடகம் மற்றும் அரங்கக் கலைகள் உயர் டிப்ளோமா பட்டப்படிப்பு தொடங்கப்பட்டது. இதன் விரிவாக்கமாக உயர் டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியல் கல்விமாணிப் பட்டம் பெற்று ஆசிரியராக பாடசாகைளில் உள்வாங்கப்படும் செயல் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

டவர் நாடகப் பள்ளியின் விரிவாக்கமாக 2022/2023 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தமிழ் மொழி மூலமான உயர் நாடகமும் அரங்கியலும் டிப்ளோமா பாட நெறி 70 மாணவர்களைக் கொண்டு தொடங்கப்பட இருக்கின்றது. இப் பயிற்சியில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய கிளையான யாழ்ப்பாணத்தில் தமது கல்விமாணிப்பட்டத்தை தொடர்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது.

க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு 06 பாடங்களில் கட்டாயம் சித்தியடைந்திருந்தல் வேண்டும். மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே தடவையில் 03 படங்களில் ஏதாவது ஒரு அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் இப்பாட நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி 28.02.2022 ஆகும்.

மேலதிகத் தொடர்புகளுக்கு தமிழ் நாடக அபிவிருத்திப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் கலாநிதி. சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ் உடன் தொடர்பு கொள்ளவும் தொ.பே. இல 077 791 1425 இப்பாட நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை கிழ்வரும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் www.towerhall.lk, www.northernprovince.lk, www.np.gov.lk, edumin.np.gov.lk.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அகமதாபாத் தொடர் குண்டுவெடிப்பு வழக்கு
## 38 பேருக்கு மரணதண்டனை விதித்தது நீதிமன்றம்!

(டில்லி)
இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் 38 பேருக்கு மரண தண்டனை விதித்து அகமதாபாத் சிறப்பு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், மேலும் 11 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அகமதாபாத்தில் கடந்த 2008-ஆம் ஆண்டு, சுமார் 70 நிமிட இடைவெளியில் 21 வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. இந்த தொடர் தாக்குதலால் 56 பேர் கொல்லப்பட்டனர். 204 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

அகமதாபாத் சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கிய இந்த வழக்கின் விசாரணை, கடந்த ஆண்டு செப்டம்பரில் நிறைவடைந்தது. குண்டுவெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனை குறித்த விவரம் அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்ட 49 பேரில் 38 பேருக்கு தூக்கு தண்டனையும், மேலும் 11 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கியும் சிறப்பு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஓமிக்ரோன் அடங்கினாலும் அதன் திரிபுகள் மீண்டும் ஆபத்துக்கு வழிவகுக்கலாம்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)
உலகெங்கும் பெரும் நெருக்கடிகளுக்கு வழிவகுத்த மிகத் தீவிரமாக பரவும் ஒமிக்ரோன் திரிபு தொற்று பரவல் குறைந்து வருகின்ற போதும், அதன் உப திரிபுகள் குறித்து உலகம் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் கொரோனா தொழில்நுட்ப ஆய்வுப் பிரிவின் தலைவர் மரியா வான் கெர்கோவ் எச்சரித்துள்ளார்.

ஒமிக்ரோன் பரவல் சற்று அடங்கிவரும் நிலையில் பல நாடுகள் கடுமையான கட்டுப்பாடுகளை நீக்கி வருகின்றமை குறித்து கவலை அடைவதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் பல துணை திரிபுகளை கொண்டுள்ளது. BA.1, BA.1.1, BA.2 மற்றும் BA.3 போன்ற திரிபுகள் கவலை அளிக்கும் வகையில் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவற்றில் உப திரிபுகளான BA.1. BA.2 திரிபு தொற்று அதிகரித்து வருவதை காண முடிகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

டெல்டா அலை அதிக உயிர்களை பலியெடுத்தது. பின்னர், ஒமிக்ரோன் உலகத்தையே முடக்கிப் போட்டது. இந்நிலையில் ஒமிக்ரோன் உப திரிபுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் நாங்கள் குறைத்து மதிப்பிட முடியாது.

கட்டுப்பாடுகளை தளர்த்தி முற்றிலும் இயல்பு நிலைக்குத் திரும்ப நினைப்பது தொற்றுநோய் இன்னும் நீண்ட காலத்திற்கு தொடர வழிவகுக்கும்.

நாம் எல்லை மீறி சென்றால் மீண்டும் ஆபத்தை சந்திக்க நேரிடலாம் எனவும் உலக சுகாதார அமைப்பின் கொரோனா தொழில்நுட்ப ஆய்வுப் பிரிவின் தலைவர் மரியா வான் கெர்கோவ் எச்சரித்தார். (நி)

## உக்ரைன் மீது ஓரிரு நாட்களில் தாக்குதல் நடத்தப்படலாம்

### அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)
உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் கிட்டத்தட்ட தவிர்க்க முடியாதது என்றும் அடுத்த ஓரிரு நாட்களில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புக்கான ரஷ்யாவின் திட்டங்களில் வழக்கத்திற்கு மாறான முறைகள் இருக்கலாம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளரான ஆண்டனி பிளிங்கன் தெரிவித்தார்.

மேலும் போருக்குச் செல்வதை விட இராஜதந்திர முயற்சிகளை புதுப்பிக்கவும் அவர் ரஷ்யாவை வலியுறுத்தினார். உக்ரைனியப் படைகளும் மொஸ்கோ ஆதரவு கிளர்ச்சியாளர்களும் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி)

## உலக நாடுகள் அமைதி காக்க வேண்டி 'Relax' வடிவில் பறந்த விமானம்

(கீவ்)
உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் உலக நாடுகள் அமைதியடைய வேண்டி நூதன முறையில் மொல்டோவா நாட்டு விமானி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனி விமானம் மூலம் வானில் வட்டமடித்த விமானி ரிலாக்ஸ் என்ற வார்த்தை வடிவில் ஆகாயத்தில் பயணித்துள்ளார். போர் பதற்றத்தில் இருந்து மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விடுதலை பெற்று நிம்மதியடையக் கோரிக்கை விடுத்துள்ளார்.

வானில் ரிலாக்ஸ் என்ற ஆங்கில எழுத்துக்களின் வடிவப் பாதையில் விமானி சென்ற வீடியோ ரேடார் கண்காணிப்பு இணையதளம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. (நி)



## பே...
## உக்ர...
## 29 த...
## அதி...

(கிவ்)

### உக்ரைன் கட்டுப்... உள்ள ஒரு கிராமத்...

உக்ரைன் எல்லையில் கடந்த ஆண்டு நவம்பர் முதல் ரஷ்யா தனது படைகளை குவித்தது. இதனால், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் உக்ரைனை சேர்ப்பதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே ரஷ்யா இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகின.

ரஷ்யா படையெடுக்கும் பட்சத்தில் உக்ரைனுக்கு ஆதரவு அளிப்போம் என அமெரிக்கா, நேட்டோ படைகள் தெரிவித்தன. மேலும், உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பில் உள்ள சில நாடுகள் ஆயுதங்களை அனுப்பி வைத்தன.

இதனால், ரஷ்யா - உக்ரைன்

## அமெரிக்க தூதர... வெளியேற்றியது ...

(வோஷிங்டன்)
மொஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்த மூத்த இராஜதந்திரியை, எந்தவித நியாயமும் இல்லாமல் ரஷ்யா வெளியேற்றியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

தூதரகத்தில் உள்ள தூதருக்கு அடுத்தபடியாக மொஸ்கோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதுவர் பார்ட் கோர்மன், ரஷ்யாவால் வெளியேற்றப்பட்டதுடன் நாட்டை விட்டு வெளியேற இரண்டு வாரங்கள் அவகாசம் அளித்ததாக அமெரிக்க வெளியுறவுத்துறை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், கோர்மன் கடந்த வாரம் ரஷ்யாவை விட்டு வெளியேறி அமெரிக்கா திரும்பியுள்ளார் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாருக்கான அறிவிப்பா?

# ரைன் கிழக்குப் பகுதியில்
# நடவை குண்டுத் தாக்குதல்

## திகரிக்கும் பதற்ற நிலை

**பாட்டில் உள்ள ஸ்டைனிஸ்டியா லுகன்ஸ்கா என்ற நகரில் த்தில் நேற்று திடீரென குண்டுவீச்சு தாக்குதல் நடைபெற்றது.**


எல்லையில் போர் பதற்றம் அதிகரித்து வந்தது. போர் பதற்றத்தை தணிக்க பல்வேறு நாடுகள் முயற்சித்து வந்தன.

அதன் பின்னர், பல்வேறு நாட்டு தலைவர்களின் பேச்சுவார்த்தை மற்றும் அமெரிக்க ஜனாதிபதியின் எச்சரிக்கை என பலதரப்பு செயல்பாடுகளுக்கு பின்னர் கிரிமியாவில் நடைபெற்று வந்த போர் பயிற்சி நிறைவு பெறுவதாகவும், படைகள் முகாம் திரும்புகின்றன என்றும் ரஷ்யா அறிவித்தது.

ஆனால், உக்ரைன் எல்லையில் தனது படைகளை குறைப்பதாக ரஷ்யா கூறுவதில் எந்த ஆதாரமும் இல்லை. தொடர்ந்து எல்லைகள் ரஷ்யா படைகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அந்த படைகள் இன்னும் ஓரிரு நாட்களில் உக்ரைன் மீது படையெடுக்கலாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், உக்ரைன் மீது இன்று குண்டுவீச்சு தாக்குதல் நடைபெற்றுள்ளது. டான்பஸ் உக்ரைனின் எல்லையோர மாகாணமாகும். இந்த மாகாணத்தில் ஒரு பகுதி உக்ரைனின் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

டான்பஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்டைனிஸ்டியா லுகன்ஸ்கா என்ற நகரில் உள்ள ஒரு கிராமத்தில் நேற்று திடீரென குண்டு வீச்சு தாக்குதல் நடைபெற்றது. அந்தக் கிராமத்தில் உள்ள மழலையர் பள்ளி மீது இந்த தாக்குதல் நடைபெற்றதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும் 29 முறை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.



அடுத்தடுத்து குண்டுகள் வீசப்பட்டதாகவும், இந்த தாக்குதலில் மழலையர் பள்ளியில் பணியாற்றி வந்த 2 ஆசிரியர்கள் காயமடைந்ததாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும், தாக்குதலுக்கு உள்ளான கிராமத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உக்ரைன் கிழக்குப் பகுதியில் பதட்டம் அதிகரித்துள்ளது. (நி)

# உறைய வைக்கும் குளிரில் நிற்க வைத்து தந்தையின் பிறந்த தினத்தை கொண்டாடிய கிம்

(பியாங்யாங்)

மர்ம தேசம் என அறியப்படும் வடகொரியாவில் நூற்றுக்கணக்கான மக்களை உறைய வைக்கும் குளிரில் நிற்க வைத்து அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனது தந்தையின் பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கிம் ஜாங் உன்னின் தந்தை, நாட்டின் முன்னாள் ஜனாதிபதி என்பதால் இந்த நாளில் பொதுமக்கள் மரியாதை செலுத்த வர வேண்டும் என கட்டாய அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வாண வேடிக்கைகளுடன் தொடங்கப்பட்ட இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான மக்களை உறைய வைக்கும் குளிரில் நிற்க வைத்து, தந்தையின் புகழ் பற்றி பேசிய ஜனாதிபதி கிம் அவருக்கும் அவருடன் மேடையில் இருந்த அவரது



நண்பர்களுக்கு மட்டும் இரகசிய வெப்பமூட்டும் கருவிகள் அமைத்துக் கொண்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேடையில் இருந்தவர்களுக்கு மட்டும் இரகசியமாக வெப்பமூட்டும் கருவிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் அந்த கருவிகளுக்கு மேடையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்திற்கு கீழாக மின்இணைப்பு கொடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தின் குளிர் 15 டிகிரி செல்சியஸ் ஆகும்.

இதில் பங்கேற்றவர்கள் எந்த வித கையுறையும் வெப்பமூட்டும் கருவிகளும் இல்லாமல் குளிரில் நின்று கொண்டிருந்ததை அந்நாட்டு ஊடகங்களில் வெளியான புகைப்படங்கள் மூலம் தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தரகத்தின் துணைத் தலைவரை
## ரஷ்யா - அமெரிக்கா குற்றச்சாட்டு



உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு பற்றிய வளர்ந்து வரும் கவலைகள் மற்றும் அடுத்த சில நாட்களில் ரஷ்யா உக்ரைனைத் தாக்க திட்டமிட்டுள்ளது என்பதற்கான எல்லா அறிகுறிகளும் அமெரிக்காவிடம் உள்ளது என்ற ஜனாதிபதி ஜோ பிடனின் எச்சரிக்கைக்கு மத்தியில் இந்த இராஜதந்திர பிரச்சினை வந்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2022-14.03.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## நிதானமும், பொறுமையும் உங்களுக்குக் கூடுதலாகத் தேவை



**எந்த காரியத்தை செய்தாலும் தீர ஆலோசித்துச் செய்யும் கும்ப இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் இருக்கிறார். உங்கள் இராசியிலேயே குருவும், சூரியனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். விரயச் சனி முடியும் வரை நிதானமும், பொறுமையும் உங்களுக்கு கூடுதலாகத் தேவை.

**ராகு-கேது ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் ராகுவும், பத்தாமிடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். 10இல் கேது சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மைதான். தொழில் வளம் சிறக்கும். இருப்பினும் பங்குதாரர்களால் சில பிரச்சினைகளும், மன அமைதிக் குறைவும் ஏற்படலாம். தொழிலை நேரடியாக கண்காணிப்பது நல்லது. சுக ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் அடிக்கடி ஆரோக்கியத் தொல்லை உண்டாகும். தாய் வழி உறவினர்களால் பிரச்சினை ஏற்படும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் நீடிக்கும்.

**மகர-சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயங்கள் கூடும். குறிப்பாக 'வாகனங்களின் பழுதுச் செலவை முன்னிட்டு, புதிய வாகனங்கள் வாங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் 'புதிதாக வேலைக்குச் சேர்ந்த இடம் திருப்தி தரவில்லையே' என்று நினைப்பீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு கிடைக்கும்.

**உச்ச செவ் வாய் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்லும் செவ் வாய், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங் களுக்கு அதிபதியான செவ்வாய் உச் சம் பெறும்பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். குறுக்கீடு சக்திகள் அகலும். உடன் பிறந்தவர்களால் நன்மை உண்டு. உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் திருமண




விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்காலத்தைப் பற்றிய பயம் அகலும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும்.

**கும்ப-புதன் சஞ்சாரம்**

மாசி 17 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் வருவது யோக ம் தான். உங்கள் இராசிக்கு பஞ்சம -அஷ்டமாதிபதியாக விளங்குபவர் புதன். எனவே பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்வதில் தீவிரம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சகப் பணியாளர்களால் தொல்லை உண்டு. மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சியை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். சேமிப்பு கரையும் நேரம் இது. இம்மாதம் அனுமன் வழிபாட்டில் கவனம் செலுத்துவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். சென்ற மாதம் பாதியில் நின்ற பணிகளை இப்பொழுது மீண்டும் செய்யத் தொடங்குவீர்கள். வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் உறவு பலப்படும். சுபச்செய்திகள் வந்துசேரும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்களும் கிடைக்கலாம். பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகளும், சம்பள உயர்வும் தானாகவே வந்து சேரும்.

## வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும்



**சந்தர்ப்பங்களை சாதகமாக்க வேண்டும் என்று சொல்லும் மீன இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, சூரியனோடு இணைந்து 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும்.

**ராகு-கேது ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும், 9ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். சகோதர ஒத்துழைப்பு குறையலாம். வழக்குகளில் திடீர் திருப்பம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்களை பாகப் பிரிவினை செய்து கொள்வதில் தாமதங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் வளைந்து கொடுத்துச் செல்ல வேண்டும். வரப்போகும் ராகு -கேது பெயர்ச்சிக் காலம் வரை, மிகுந்த கவனத்தோடு செயல்படுவது நல்லது. சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வதால் ஓரளவு மன அமைதி கிடைக்கும்.

**மகர-சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், லாப ஸ்தானத்தில் உள்ள சனியோடு இணைவதால் நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு அதை ஏற்றுக் கொள்ளலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்க முன்வருவீர்கள்.

**உச்ச செவ்வாய் சஞ்சாரம்**

மாசி 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்லும் செவ்வாய், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உச்சம் பெறுவது யோகம்தான். நினைத்தது நிறைவேறக்கூடிய அமைப்பு உண்டு. நீண்டநாள் நோய் அகலும். பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும்.




சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். உத்தியோக மாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும்.

**கும்ப-புதன் சஞ்சாரம்**

மாசி மாதம் 17 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் 12இல் மறையும் பொழுது நன்மை செய்யும் என்பார்கள். எனவே அந்த அடிப்படையில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். 'புத ஆதித்ய யோகம்' செயல்படும் இந்த நேரத்தில், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

இம்மாதம் வளர்ச்சியில் உள்ள தளர்ச்சியை வைரவர் வழிபாடு அகற்றும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் விரயங்கள் ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைக்கும். கணவன்- மனைவி ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது விரிசலை தடுக்கும்.

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் இடத்தில் மிகுந்த கவனம் தேவை. ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக ரத்து செய்க

## சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**

தற்காலிக அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு நாற்பத்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுபான்மை மக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மாற்று கருத்துக்களை வெளியிடுவோர் உள்ளிட்டோரை அடக்கு முறைக்கு உட்படுத்தவும் துன்புறுத்தவுமே இந்த சட்டத்தை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துகின்றது என தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தில் திருத்தங்களை செய்வதாக அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ள போதிலும், உத்தேச திருத்தங்கள் இலங்கையின் அரசியல் சாசனத்திற்கும், சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு அமைவானதாக இல்லை எனவும் இந்த உத்தேச திருத்தங்களினால் மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே குறித்த சட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது. (நி)

# சுற்றுலாப் பயணிகளுக்காக அதிசொகுசு ரயில்கள்

## —மார்ச்சில் இருந்து ஆரம்பம்—

(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக புதிய அதிசொகுசு விசேட ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இதற்கமைய முதலாவது ரயில் எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து கண்டி மற்றும் எல்ல ஆகிய இடங்களுக்கு சேவையை தொடங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தயாராகிறது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய சபை உறுப்பினர், மருத்துவர் பிரசாத் கொலம்பகே இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

சம்பளக் கொள்கையை மீறி தீர்மானம் எடுப்பதாகக் குற்றஞ்சாட்டியே இந்த போர்ராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. (நி)

# எரிபொருள் மீதான வரியை நீக்குமாறு நிதியமைச்சரிடம் கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் மீதான வரியை நீக்குமாறு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எழுத்து மூலம் கோரிக்கையினை நேற்று முன்வைத்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.(நி)

# இன்று ஒரு தகவல்

## இது நன்றி கெட்ட உலகமா?

ஒருவருக்கு 100 உதவிகள் செய்திருப்பீர்கள். 101 ஆவது உதவியை வேறு வழியின்றி மறுத்திருப்பீர்கள். அல்லது இயல்பாகவே முயன்றும் உங்களால் முடியாமல் போயிருக்கும்.

ஆனால், அந்த நபர் 100 ஐயும் மறந்து விட்டு 101 ஆவது சம்பவத்தையே பெரிது படுத்திப்பார்ப்பார்.

உங்களோடு முன்பு போல் பழகமாட்டார். முகம் கொடுத்துப்பேசமாட்டார். ஏன், உங்களை விரோதி போல் நடத்தத் தொடங்கி விடவும் கூடும். இது தான் பெரும்பான்மையினரிடம் நாம் காணும் பண்பாடு.

இயல்பாகவே உங்கள் மனம் சலிப்படைந்துவிடும். என்ன நன்றி கெட்ட உலகமடா இது? என்று பழிக்கவும் செய்வீர்கள்.

இப்படிப்பட்ட ஓரிரு அனுபவங்களை வைத்து நீங்கள் அடியோடு மாறிவிடுவீர்கள்.

யார் என்ன உதவி கேட்பினும், நமக்கேன் வம்பு? எனத் தாமரையிலைத் தண்ணீராவீர்கள் இல்லையா?

ஆம் என்பது உங்கள் பதிலானால் உங்களுக்கும் முதலில் கூறப்பட்ட வகையினருக்கும் அதிக வேறுபாடு இல்லாமல் போய்விடும்.

மேலும், தகுதியறிந்து உதவத் தவறினீர்கள். அல்லது 100 முறை சொன்ன நன்றிகளில் ஒன்றைக் கழிக்க மறந்தீர்கள் என்பதே நியாயமான வாதம்.

இது, அவர்கள் செய்யும் தவறுக்கு அடுத்தபடியான தவறு. இத்தகைய மனிதர்கள் நமக்கு அனுபவப் பாடங் களைத் தந்த ஆசான்கள்.

இவர்களைக் கொண்டு உலகின் ஒரு கோணத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர, தவறான நியதிகளை நிர்ணயித்துக் கொள்ளலாகாது.

நன்றி கெட்ட ஜென்மங்களை இனங் கண்டு கொள்ளும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இவர்களை விட்டு ஒதுங்க வேண்டுமே தவிர, உலகையே வெறுத்து ஒதுக்கக் கூடாது.

மற்றவர்களுக்கு உதவ மறுத்துக்கையைக் கட்டிக் கொண்டு நிற்கும் பழக்கம் இன்றைய நடை முறைக்குச் சரிப்பட்டு வராது.

அப்படிச் செய்தால் மனித சமுதாயத்திடமிருந்து நீங்கள் விலகிப் போகிறீர்கள் என்று பொருள்.

மேற்கூறிய நபர்களை மட்டும் வைத்துத் தவறான கோட்பாடுகளை நிர்ணயித்துக் கொண்டு விட்டால், நல்ல உள்ளங்களையும் பகைத்துக் கொள்ள நேரிடும்.

பரஸ்பர உதவிகள் கிட்டா. வெற்றிக் குளத்தில் நீச்சலடிக்க முயலுவானேன்?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் நாயும்

நாயின் செயலை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த ஆமை இதுதான் சமயம் என்று நாயின் முன் தோன்றியது.

ஆமை: எ! நண்பா, நீ கொழுகொழு வென்று இருப்பதற்கு இது தான் காரணமா? இதை ஏன் என்னிடம் சொல்ல மறுத்துவிட்டாய்?

நாய்: ஐயோ, நீயா! என் பின்னாலேயே வந்துவிட்டாயா? சரி இப்போது உனக்கு இரகசியம் தெரிந்து விட்டது. ஆனால், தினமும் என்னுடனே வந்துவிட்டு என்னுடனே திரும்ப வேண்டும். சாயங்காலம் 6 மணிக்குள் இங்கிருந்து போய்விட வேண்டும். இல்லையென்றால் அந்த விவசாயியிடம் மாட்டிக் கொள்வோம். சரியா?



ஆமை: சத்தியமாக! சத்தியமாக!

தினமும் ஆமையும் நாயுடன் சேர்ந்தே போய் கிழங்குகளை கூடையில் அள்ளிக் கொண்டு வந்தன, நாளாக நாளாக தேவைக்கு அதிகமான கிழங்குகளை எடுக்க ஆரம்பித்தது ஆமை. இதனால், தினமும் நாய் தனக்குத் தேவையான கிழங்குகளை எடுத்துக் கொண்டு கிளம்பிய பின், தாமதமாகவே வீட்டுக்குச் சென்றது ஆமை. இதை கவனித்த நாய் ஆமையை எச்சரித்தது.

நாய்: என் ஆமை நண்பா, நாம் எடுத்துக்கொள்ளும் கிழங்கின் அளவு ரொம்ப அதிகமாகிவிட்டது. நேற்று இதனால் 5.45 மணிக்குத்தான் கிளம்பினோம்.

இப்படியே தாமதமாக கிளம்பினால் 6 மணிக்கு வரும் விவசாயி நம்மைப் பிடித்துக் கொண்டுவிடுவான். அதோடு நம் கதை முடித்துவிடும்.

ஆமை: கவலைப் படாதே நண்பா, நான் மழைக்காலத்துக்காக நிறைய கிழங்குகளை சேமித்து வைக்கிறேன். அந்த விவசாயி நம்மை பிடிக்கவே முடியாது.

நாய்: பேராசைப் படுவது நல்லதல்ல. நிறைய கிழங்குகளை அள்ளிக்கொண்டு தாமதமாகப் போகும் போது அந்த விவசாயி வந்துவிட்டால், கிழங்குளைச் சுமந்து கொண்டு நம்மால் வேகமாக தப்பி ஓட முடியாது.


ஆமை: என்னையா பேராசைக்காரன் என்கிறாய்! உன் வேலையை மட்டும் பார்த்துக் கொள், என் கூடையில் எவ்வளவு கிழங்கு எடுக்கிறேன் என்பதைப் உற்றுப்பார்க்காதே.

ஆமை: இப்படிச் சொன்ன மறுநாள் மாலை 5.30 மணிக்கு கிழங்குகளுடன் நாய் தன் வீட்டுக்குக் கிளம்பியது. கொஞ்சம் காத்திருந்தால் இன்னும் கிழங்குகளை எடுத்துக் கொண்டு போகலாம் என்றது ஆமை.

(தொடரும்...)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




பெண்ணுக்குச் சரி உரிமை தந்த முதற் கடவுள் சிவனார் சக்தியும் சிவனுமாய் அவர்களை மாந்தர் வழிபடுகின்றனர்.

கங்கை வானவர்க்கு அமுதமாக விளங்கிப் பரலோகவாசியாய் இருந்தாள். அவள் தேவர்களுக்கு நீராடும் புனலாக நிலவினாள்.

'சகரன்' என்ற பெயருடன் சூரிய குலத்து அரசன் ஒருவன், தன் புகழை எட்டுத்திக்கும் பரப்பி, ஏற்றமுடன் ஆட்சி செய்து வந்தான். தன்னிகரில்லாத வேந்தனாய் அவன் விளங்கினான் தன் மாட்சியை உலகுக்கு அறிவிக்க அக்கால வழக்கப்படி அசுவமேத யாகம் ஒன்று நடத்தினான். அவன் அனுப்பி வைத்த குதிரை எட்டுத் திக்கும் சென்றும் அடக்குவார் இன்றிப் பாதாள உலகம் சென்றது. அங்கு தவத்திற் சிறந்த முனிவர் 'கபிலர்' என்பார். அதைக் கட்டி வைத்தார். அது மேலே எழும்பி வாராமல் அங்கே அகப்பட்டுக் கொண்டது.

சனகனின் புதல்வர் பதினாறாயிரவர் மண்ணைத் தோண்டி அந்த இடத்தைக் கண்டுபிடித்தனர். சகரர் தோண்டிய இடம் கடலாக அமைமையின் அதற்குச் சாகரம் என்ற பெயரும் வழங்குகிறது. வேல் ஏந்திய மன்னரை எதிர்க்கச் சென்றவர், நூல் அணிந்த மார்பன் ஆகிய முனிவரைச் சந்தித்தனர் நொய்ந்த அவர் உடம்பைக் கண்டு அவர் ஆற்றலைக் குறைவாக மதிப்பிட்டனர். அனுமதி கேட்டு கட்டு அவிழ்க்க வேண்டியவர் அவசரப்பட்டுக் குதிரையை மீட்டனர் அதற்குக் கிடைத்த வெகுமதி அவர் இட்ட சாபம் வந்தவர் அனைவரும் சாபத்தால் வெந்து சாம்பல் ஆயினர்.

பிற்காலத்தில் சகரனின் சந்ததியார்களுள் ஒருவனான பகீரதன் என்பான் முந்தையோர் கதைகளைக் கேட்டு வேதனை அடைந்தான். ஈமைக்கடனும் செய்ய முடியாமையால் அவர்கள் நாமமும் மறைந்து சாம்பலாய் மாறி அவர்கள் சரித்திரத்தைச்சொல்லிக் கொண்டிருந்தது.

அவர்கள் சாம்பலை ஒருங்கு திரட்டிப் புண்ணிய நதியின் தீர்த்தத்தை அவற்றின் மீது தெளித்து, அவர்கள் வானுலகு நண்ண அவன் முயற்சி எடுத்துக் கொண்டான். "கங்கை நீர்தான் புனிதம் மிக்கது" என்று சாத்திரம் அறிந்தவர் சாற்றினர் ஆனால், அது மண்ணுலகில் பாய்வதில்லை விண்ணவரின் உடைமையாக இருக்கிறது என்பதைப் பகீரதன் அறிந்தான்.

"செத்தவர்களுக்குச் சிவலோகம் தருதற்கு மட்டும் அன்றிப் பாரத நாட்டுக்கு வளமும் வாழ்வும் தர, அந்நதி தேவை" என்பதைச் சிந்தித்து உணர்ந்தான். 'மேலவர் என்று சொல்லும் தேவர்கள் தம் உடைமை என்று மதித்த அந்த நதியை மண்ணுக்குக் கொண்டு வர முடிவு செய்தான்.

படைப்புகளுக்கு எல்லாம் காரணம் பிரமன் என்பதால் அவனை அணுகினான் பிரமன் சகல சாத்திரங்களையும் அறிந்தவன் அவன் சட்ட நுணுக்கங்களை உணர்ந்தவன் நதியை எந்த ஒரு மாநிலமும் உரிமை கொள்ள முடியாது. அது பாயும் இடம் எல்லாம் அதற்கு வழி விட வேண்டும்என்பதை அறிந்தவனாய் இருந்தான்.

கங்கை நதி, மேலிடத்தில் வாழ்ந்த தேவர்களுக்கு மட்டும் நீராடவும், விளையாடவும் பயன்பட்டு வந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுகுடி சொற் கேளாது.
– முதுமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனித உரிமை என்பது ஐ.நா சபையை சமாளிப்பதா?

இலங்கையின் கந்தறு நிலை தமிழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்துக்கிடமில்லை.

ஆனாலும் இலங்கையின் இன்றைய பொருளாதார நிலை இன்று நேற்று கருக்கட்டியதன்று.

மாறாக, இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக என்று வஞ்சகம் செய்ய ஆரம்பித்தார்களோ அன்றே இன்றைய அவலநிலைக்கான கருக்கட்டல் ஆரம்பமாகி விட்டது.

எனினும் அந்த உண்மையை இலங்கை ஆட்சியாளர்களோ, சிங்கள மக்களோ புரிந்து கொள்வதாக இல்லை.

அவர்களைப் பொறுத்தவரை இலங்கையின் பொருளாதாரம் மீட்டெடுக்கப்படும் என நம்புகிறார்கள்.

ஆனால் அது ஒருபோதும் சாத்தியப்பட மாட்டாது.

இலங்கையின் இன்றைய கந்தறுநிலை என்பது மனுநீதி மீறப்பட்டதனால், அப்பாவி மக்களைக் கொன்றொழித்ததனால், நீதி விசாரணையின்றி இனத்தை வஞ்சிக்கும் நோக்கில் தமிழ் அரசியல் கைதிகளை சிறைகளில் நீண்டகாலம் அடைத்துவைத்து வதைப்பதனால், இன்னும் என்னென்ன அக்கிரமங்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டதோ அவையாவும் ஒன்றுதிரண்டு, கன்மவினையாக இந்த நாட்டை அழிக்கத் தலைப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவுகள் நாளும் அழுகின்ற கண்ணீர் இலங்கையின் செல்வத்தைத் தேய்க்கும் படையாக நின்று தாக்குகிறது.

இதனை உணராத சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த தேரர்களும் இலங்கை பௌத்த சிங்கள நாடென்று மார்தட்டுகின்றனர்.

அந்தோ! அறிவிலிகாள்! இதே நிலைமை இந்த நாட்டில் நீடிக்குமாயின், ஒட்டுமொத்தமாக இலங்கையிலிருந்து புலம்பெயர்வு நடந்தாகும்.

இப்புலம்பெயர்வில், பொருளாதார பலமுடையவர்களும் புத்திஜீவிகளும் வெளிநாட்டுத் தொடர்புடையவர்களும் முன்னிற்பர்.

அவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்படுமாயின், அதன் பின்னர் இலங்கையைக் காப்பாற்றுவதென்பது முடியாத காரியமாகிவிடும்.

நிலைமை இதுவாக இருக்கையில்; செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேடாமல், கழிவிரக்கம் ,கொள்ளாமல் மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை வஞ்சிப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டு இலங்கை ஆட்சியாளர்களும் பௌத்த பீடங்களும் செயலாற்றுவது இந்த நாட்டுக்குப் பேராபத்து வரப்போகிறது என்பதைச் சுட்டி நிற்கிறது.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கியும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உரிய நீதியை வழங்கியும் மனித உரிமையை நிலைநாட்டுவதே மனுநீதியாம்.

ஆனால் அதனைச் செய்யாமல் ஐ.நா சபையைச் சமாளித்தால் அதுபோதும் என்று நினைத்து கூடியிருந்து ஆராய்கின்ற கெடுகுடிகளை என்செய்வோம் பராபரமே.

# சிவராத்திரிக்கு திருக்கேதீஸ்வரம் வருபவர்கள் முழுமையாக தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும்

## மன்னார் அரச அதிபர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வுகளுக்காக நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தர உள்ள நிலையில் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 1 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெற உள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று மாலை 3 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலகர் சபை, திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கலந்துரையாடலை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தை விட இவ்வருடம் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தர அனுமதி வழங்கி உள்ளோம்.

வருகை தருகின்ற பக்தர்கள் முழுமையாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். தடுப்பூசியை பெற்றுக்கொண்டமைக்கான ஆதாரமாக தடுப்பூசியை அட்டையை அல்லது தடுப்பூசி அட்டையினை கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்து கொண்டு வர வேண்டும்.

கடமையில் ஈடுபடுத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர்கள் நுழைவாயிலில் பரிசீலனை செய்வார்கள். அதன்போது காண்பிக்க வேண்டும்.

திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு வருகை தருகின்ற சகல பக்தர்களும் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்க வேண்டும் என்றார். (ஞா-285)

# தேசிய பாடசாலைகளாக மேலும் 125 பாடசாலைகள்

## தரமுயர்த்த கல்வியமைச்சு திட்டம்

(கொழும்பு)

மேலும் 125 பாடசாலைகளை எதிர்வரும் 2 மாதங்களில் தேசிய பாடசாலை தரத்திற்கு உயர்த்தவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்தவொரு தேசிய பாடசாலையும் இல்லாத 125 பிரதேச செயலக பிரிவுகளில், தலா ஒரு பாடசாலை வீதம் தேசிய பாடசாலை தரத்திற்கு உயர்த்தப்படவுள்ளதாக அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் கித்சிறி லியனகம குறிப்பிட்டார்.

ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை 831 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த பாடசாலைகளை இவ்வருட இறுதிக்குள் கட்டங்கட்டமாக தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை 9 மாகாணங்களிலும் 9 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் கித்சிறி லியனகம கூறினார்.

வசதிகளுடன் கூடிய கற்றலுக்கான சூழலை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமென அவர் மேலும் தெரிவித்தார். (ஞா)

# அகில எம்.பிக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவலவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின்போதே அவருக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதன்படி, அவரை தனிமைப்படுத்த பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு மிக நெருக்கமானவர்களைக் கண்டறிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஞா)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## பக்தனின் லட்சியம்

❖ தன்னலம், கணக்குப் பார்த்தல், பேரம் பேசுதல், அச்சம் போன்றவற்றிலிருந்து விடுபட்டு அவற்றைக் கடந்துவிட்ட பக்தனின் லட்சியம் யாது?

❖ இவன் இறைவனிடம் கூட, என்னிடம் உள்ள எல்லாவற்றையும் உனக்கு அளிக்கிறேன். பதிலுக்கு நான் எதையும் வேண்டேன். உண்மையில் என்னுடையது என்று இந்த உலகில் எதுவும் இல்லை என்று தான் கூறுகிறான்.

❖ இத்தகைய துணிவு உள்ளத்தில் எழும்போதுதான் பக்தனின் லட்சியம் நிறைவுற்ற பக்தியாகிறது. எதற்கும் அஞ்சாத பராபக்தியாகின்றது.

❖ பக்தனின் இந்த உயரிய லட்சியத்தில் குறுகிய நோக்கங்களுக்கு இடமில்லை. அவன் அன்பு, உலகையே அரவணைத்துச் செல்லும் முக்கியமான அன்பு.

❖ சிறப்புமிக்க இந்த இறையன்பு புறச்சின்னங்கள், கருத்துக்கள் இவை எவற்றின் துணையும் இல்லாமல் லட்சிய நிலையிலே விரும்பப்பட்டு வழிபடப் பெறுகின்றது.

❖ இதுவே பராபக்தியின் மிகச்சிறந்த நிலை. அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்ட [illegible] லட்சியத்தை வழிபடுவது பக்தியின் மற்ற வடிவங்கள் இதை அடையும் வழியில் அமைந்த பல படிகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வருடத்தை விட இம்முறை விளைச்சல் குறைவு

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு காலபோக அறுவடையில் ஹெக்டயர் ஒன்றுக்கு இரண்டு முதல் மூன்று மெற்றிக்தொன் வரையான விளைச்சல் கிடைத்துள்ளாதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் மானாவாரி பயிர் செய்கை நிலங்கள் உள்ளடங்கலாக சுமார் 69 ஆயிரம் ஏக்கர் முதல் 70 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் இம்முறைக்கான காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்று வருகின்றன.

இந்த நிலையில் கடந்த காலங்களில் அறுவடைகள் மூலம் கிடைக்கப்பெற்ற உற்பத்திகளை விட இந்த முறை குறைந்த அளவு விளைச்சல்களே கிடைத்துள்ளன எனவும் இதனால் பாரிய நட்டத்தினை எதிர்கொண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். போதிய உரவகைகள் இன்மை, களை நாசினிகள் இன்மை காரணமாக சில இடங்களில் விவசாயிகள் தங்களுடைய பயிர் செய்கைகளை கைவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இரசாயன உரங்களை தடுத்து நிறுத்தி சேதனப் ப்சளை பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில் உரத் தட்டுப்பாடு மற்றும் கிருமி நாசினிகள், களை நாசினிகள் தட்டுப்பாடு காரணமாக குறித்த விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடைகள் நிறைவு பெற்று வரும் நிலையில் இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது கடந்த போகங்களில் ஹெக்டயர் ஒன்றுக்கு 4.3 மெற்றிக் தொன் முதல் 4.5 மெற்றிக் தொன் வரையான விளைச்சல் கிடைத்திருந்தன.

இந்தப் போகத்தில் விளைச்சல் குறைவடைந்துள்ளன. அதாவது ஹெக்டயர் ஒன்றுக்கு 2.5 மெற்றிக் தொன் முதல் 3 மெற்றிக் தொன் வரையான விளைச்சல் மாத்திரமே கிடைத்துள்ளதாக மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-315)

# மன்னார் மாவட்டத்தில் கடந்த 17 நாட்களில் 400 தொற்றாளர்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மேலும் 23 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கடந்த 17 நாட்களில் 400 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இவ்வருடம் 601 தொற்றாளர்களும், தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 3784 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 39 கொரோனா மரணங்களும் நிகழ்ந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (க-285)

# போதைப்பொருள் விற்பனை நால்வர் கைது

(கரணவாய்)

சட்ட விரோதமான போதைப் பொருட்கள் விற்பனை செய்ததில் இரு வேறுபட்ட இடங்களில் 4 பேரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துன்னாலை பகுதியில் சட்ட விரோதமான ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், அல்வாய் பகுதியில் கஞ்சாவை தமது உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் நிறுத்த நெல்லியடி பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-60)

## ஐஸ்போதை-கஞ்சாவுடன் இருவர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பளை நகரப்பகுதியில் கடை ஒன்றினை நடத்தி வந்த கடை உரிமையாளர் ஒருவர் கடையில் ஐஸ் போதை பொருள் வைத்திருப்பதாக பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை பளை முகமாலை பகுதியிலும் கடந்த சில தினங்களுக்கு முன் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரையும் கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-315)

## 'யாவர்க்கும் நலம்' ZOOM கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள zoom செயலி ஊடான "யாவருக்கும் நலம்" எனும் தொனிப்பொருளிலான தொடர் நிகழ்ச்சி வாராந்தம் சனிக்கிழமை மாலை 7 மணிமுதல் 9 மணிவரை இடம் பெற்று வருகிறது. அந்தவகையில் இன்று சனிக்கிழமை மாலை 7 மணி முதல் 9 மணி வரை "வாய் சுகாதாரம் பேணுதல்" எனும் தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்ற விரும்புவோர் 899 8528 2023 என்ற Meeting ID ஊடாக 354485 எனும் pass code ஐ பயன்படுத்தி இணைய முடியும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் அறிவித்துள்ளார். (க)

## சட்ட விரோத மணல் அகழ்வு மூவர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாற்று பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த இடத்தினை முற்றுகையிட்ட பொலி ஸார் குறித்த குற்றச் செயலில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்ததுடன் மணல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட மூன்று உழவு இயந்திரங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களை இன்றயதினம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.டீ.சதுரங்க தெரிவித்தார். (க-316)

## மகளிருக்கான யோகப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண இளைஞர் விவகாரா அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மகளிருக்கான யோகக் கலைப் பயிற்ச்சி நெறி இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு யா/மங்கையற்கரசி வித்தியாலத்தில் ஆரம்பமாகி நடைபெறும். ஆர்வமுடையோர் இப் பயிற்ச்சி நெறியில் பங்குபற்றி பயன் பெறுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (க)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**மனவளக்கலை யோகப் பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் அன்பர்களுக்கோர் இனிய செய்தி!

❖ அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் ❖

என்ற பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான 'உலகப்பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய "மனவளக்கலையை"

இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்

❖ முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்பம்

❖ அடுத்து வரும் அகத்தாய்வு! 1... 2... 3... பயிற்சிகளுக்கும்

"அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெருமனம் கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்...

எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

❖ உடல் நலத்திற்கு – எளிய முறை உடற்பயிற்சி ❖ உயிர் வளத்திற்கு – சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி

❖ மன அமைதிக்கு – தியான பயிற்சிகள் ❖ அறிவு வல்லமைக்கு – ❖ அகத்தாய்வு பயிற்சிகள்

❖ உறவுகள் மேம்பட – தற்சோதனைப் பயிற்சிகள்

காலம்: 19.02.2022 சனிக்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00

பயிற்சியை வழங்குபவர் : துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமாரன்
துணை பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா
மற்றும் அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி, அருள்நிதி க.ஜெயராணி

வருக வருக நலம் பெருக பெறுக
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இ-021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309

(C-3802)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 பேர்...

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15,949 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## ஹெரோயின்...

கடந்த மாதம் 28ஆம் திகதி மாலை 3 மணி தொடக்கம் 4 மணிக்கு இடைப்பட்ட நேரம் யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள கோவில் குருக்கள் ஒருவரின் வீட்டினுள் குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குருக்கள் வழமைபோல குறித்த நேரத்தில் கோவிலுக்கு செல்வதை அவதானித்த பிரதான சந்தேகநபர் வீட்டின் முன் கதவுகள் பூட்டப்பட்டு இருந்தமையால் பின்பக்கமாக சென்று பின்பக்க கதவை உடைத்து வீட்டின் சாமி அறைக்குள் சென்று அங்கிருந்த 24 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளார்.

இதில் தாலிக்கொடி, சங்கிலி, கைச் சங்கிலி, காப்பு போன்ற நகைகள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் குருக்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் தமது விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனடிப்படையில் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் பிரதான சந்தேகநபர் யாழ் கஸ்தூரியார் வீதியில் வைத்து அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொண்ட விசாரணையில் திருடப்பட்ட நகைகளை குறித்த திருட்டுக்கு உடந்தையாக இருந்த நபர் ஒருவர் மூலமாக வங்கியில் பணிபுரியும் ஒருவரின் உதவியுடன் வேலணையில் உள்ள வங்கி ஒன்றில் அடகு வைத்ததாகவும் அடகுவைத்ததன் மூலம் பெறப்பட்ட பணத்தை கொண்டு ஹெரோயின் கொள்வனவு செய்ததாகவும் அதீத ஹெரோயின் பயன்பாட்டினால் ஹெரோயினை உட்கொள்வதற்கு பெருமளவு பணம் தேவைப்படுவதால் இப்படியான திருட்டுக்களில் ஈடுபடுவதாக பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மேலும் ஒரு நெக்லஸ் மற்றும் காப்பு ஒன்றும் தனியார் அடகு நிறுவனம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளதால் அதனை மீட்கும் முயற்சியினை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். திருடப்பட்ட மிகுதி நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மேலும் பிரதான சந்தேகநபர் உட்பட உடந்தையாகவிருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 28 வயது நபரும் நகைகளை அடகு வைக்க உதவிய வேலணை பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின் பாவனையால் யாழில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் ஹெரோயின் பாவனையில் சிக்கும் இளைஞர்கள் தொடர்பில் பெற்றோர் கூடிய கவனம் செலுத்தும்படி பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஞா-18,33,104)

## பூஜித, ஹேமசிறி...

நீதியரசர்களான நாமல் பலாலே, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இஸ்ஸதீன் ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த 2021 மே மாதம் 3ஆம் திகதி முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோருக்கு எதிராக, 2019 உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில், உயிரிழுந்த மற்றும் காயமடைந்தவர்கள் குறித்து கொலை மற்றும் கொலை முயற்சி குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய தகவல்களை காட்சிப்படுத்தும் நடவடிக்கை முதலில் கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் முன்னெடுக்கப்பட்டது.

பூஜித ஜயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகிய இருவருக்கும் எதிராக மூவர் கொண்ட விசேட நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் தனித்தனியாக வழக்கு விசாரணைகள் இரண்டினை முன்னெடுக்குமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை முன்வைக்கும் முகமாகவே இவ்வாறு தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன. (ஞா)

*(இது தொடர்பான மேலதிக செய்தி உள்ளே)*

## சந்திரிகா, சம்பந்...

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகள் விசாரணை இன்றி கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைகளில் அடைத்[illegible] பதுடன் மிகவும் [illegible] பாடுகளை கொண்ட பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கையெழுத்துப் போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த கையெழுத்து போராட்டத்தில் பொதுமக்களின் கையெழுத்து பெற்று பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரி கிராமங்கள் தோறும் குறித்த கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் த.தே.கூ. தலைவர் இரா.சம்பந்தனும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக்கோரி நேற்று கையெழுத்திட்டனர். (ஞா-33)

## கிளிநொச்சியில்...

நொச்சி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப் படவுள்ள இப்போராட்டம் டிப்போ சந்தியில் நிறைவடையவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஞா)

## + 1,282...

1,282 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 634,333ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## எம்.பி...

வன்னி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்க் கட்சி தலைவர்கள் ஒரு தொகுதியினருடன்சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

தமிழ்ச் சைவப் பேரவை தலைவர் மேனாள் நீதிபதி இ.வசந்தசேனன், பிரதித் தலைவர் மேனாள் அரச அதிபர் நா.வேதநாயகன், பொதுச் செயலாளர் மருத்துவர் தி.சுதர்மன், பொருளாளர் சிவரூபன், சைவ மகா சபைத் தலைவர் நா.சண்முகரத்தினம், பொதுச்செயலாளர் மருத்துவர் பரா. நந்தகுமார், பொருளாளர் அருள் சிவானந்தன் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் பங்கேற்றனர்.

தமிழ்ச் சைவர்களின் கரிசனைகளையும் பாதிக்கப்பட்ட எம்மவருக் [illegible] பெற்றுக் கொடுக்கவும் வலியுறுத்துவதுடன், தமிழர் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படாத வகையில் தமிழர் தாய்ச் சமயமான சைவ சமயத்தின் தனித்துவத்துக்கு, புனிதத்துக்கு சகோதர மதங்களால் ஏற்படுத்தப்படும் அநீதிகளை தேவையற்ற திணிப்புக்களை நிறுத்துவதற்குரிய அரசியல் ரீதியான செயற்பாடுகளை சகல தளத்திலும் செயற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ரெலோவின் தேசிய அமைப்பாளர் கு.சுரேன் ஆகியோருடன் பேச்சு நடந்தது.

தொடர்ந்து ஏனைய பாராளுமன்ற தமிழ் பிரமுகர்களையும் எதிர்வரும் நாட்களில் சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஞா-33)

## சர்வதேச நாணய...

நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஞா)


தன நிதானய
திகதி - 2022.02.18
சீட்டிழுப்பு இலக்கம் - 712
C 19 28 47 63
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 18.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2977
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 14 33 62 66

மஹஜன சம்பத
திகதி 2022/02/18
சீட்டிழுப்பு இலக்கம் 4682
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 2 7 2 7 9

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.18
சீட்டிழுப்பு இலக்கம் 0023
கன்னி 16 18 40 50 கன்னி

மெகா பவர்
திகதி 18/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1030
Q 04 03 24 64 76

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1696 திகதி 2022.02.18
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 04 39 71 92

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1659 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 18.02.2022 தினம் வெள்ளி
P 52 55 57 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,902,099/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.18
சீட்டிழுப்பு இல: 3820
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,737,140/-
வெற்றி இலக்கங்கள் 28 31 45 75 V

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 136
சீட்டிழுப்பு திகதி 18.02.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 33 38 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,265,080/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,550,627/-
திகதி 18.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3371
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 11 23 35 51
9409483
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,433,000/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 35 02 16 64 67
சீட்டிழுப்பு வாரம் 835
2022.02.18 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 214,165,483/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1485
சீட்டிழுப்பு திகதி: 2022.02.18
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,249,700/-
வெற்றி இலக்கங்கள் 15 30 42 49 M


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக இருப்பதில் பெருமை கொள்கிறேன்

## புதிய அமெரிக்கத் தூதுவர் டுவிட்

(கொழும்பு)

இலங்கைக்கான அடுத்த அமெரிக்க தூதுவராக இருப்பதில் தான் பெருமை கொள்வதாக இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (Julie Chung) தெரிவித்துள்ளார்.

டுவிட்டரில் நேற்று முன்தினம் இட்டுள்ள பதிவில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் மேலும், இலங்கை அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் பொதுமக்கள் ஆகிய தரப்புகளுடன் இணைந்து பணியாற்ற நான் ஆர்வத்துடன் இருக்கிறேன்.

கொழும்புக்கு புறப்படுவதற்கு முன்னர், அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி ப்ளின் கென்னை (Antony Blinken) சந்தித்திருந்தேன்.

இலங்கைக்கான அடுத்த அமெரிக்க தூதுவராக இருப்பதில் நான் பெருமை கொள்வதாக, இராஜாங்க செயலாளரிடம் கூறியிருந்தேன்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், இரு தரப்புகளுக்கிடையே பகிரப்பட்ட மதிப்புகளை ஆராயவும், உறவுகளை பலப்படுத்தவும் ஆவலாக உள்ளேன் என தெரிவித்துள்ளார். (ஞா)

# யாழில்...

முக்கிய ஆவணங்கள் உள்ளடங்கிய பெட்டகம் என்பன நேற்று முன்தினம் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் உள்ளவர்கள் நேற்று காலை எழுந்து பார்த்த வேளையே வீட்டில் திருட்டு நடந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதேவேளை அராலி பகுதியில் பெண்மணி ஒருவரது ஒரு பவுண் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த பெண்மணி சிகிச்சைக்காக வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு சென்றுவிட்டு வீடு செல்வதற்கு பேருந்துக்காக காத்திருந்தார். அந்நேரம் அவ்வழியே மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணால் அவரது தங்கச்சங்கிலி அறுத்து செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-104)

# கையளிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது?

## நீதியமைச்சரிடம் கேள்வி

(கொழும்பு)

உயிரோடில்லாதவர்களை கேட்டால் எப்படி தருவது என்று நீதி அமைச்சர் கேட்கின்றார் எனில் கையளிக்கப்பட்ட எமது உறவுகளிற்கு என்ன நடந்தது என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க உப செயலாளர் ரத்தீஸ்வரன் கவிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சியில் நாளை இடம்பெறவுள்ள போராட்ட ஏற்பாடுகள் தொடர்பிலான ஊடக சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பகல் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது குடும்பங்களின் சங்க தலைவி கதிர்காமநாதன் கோகிலவாணி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நாளை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ள பேரணி டிப்போ சந்தியில் நிறைவடையவுள்ளதாகவும் அதில் அனைத்து தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

நீதி அமைச்சர் தெரிவித்த கருத்தானது கலங்க வைத்துள்ளதாகவும் 11 ஆண்டுகளிற்கு மேலாக எமது உறவுகளை தேடி போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் எமது உறவுகளிற்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் சர்வதேசம் நீதியை பெற்றுத்தர வேண்டும் என்பதை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அனைவரும் பங்கு கொண்டு ஆதரவினை வழங்க வேண்டும் என அழைப்பு விடுத்தார். (ஞா-315,316)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

# 400 கிலோ கஞ்சா படகுடன் நாகையில் ஐவர் கைது

(சென்னை)

நாகையில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 400 கிலோ கஞ்சா படகுடன் பறிமுதல் செய்யப்பட்டது. 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கஞ்சா கடத்தல் மற்றும் கஞ்சா விற்பனையை தடுக்கும் பொருட்டு நாகபட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர் உத்தரவின் பேரில் உதவி ஆய்வாளர் பாலமுருகன் தலைமையில் தனிப்படை அமைத்து தீவிர கஞ்சா வேட்டை நடத்தப்பட்டு பல்வேறு கஞ்சா வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

இந்த தனிப்படையினர் தங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில், நேற்று காலை 7.00 மணியளவில், நாகபட்டினம் நகர காவல் சரகம், கீச்சாங்குப்பம் பழைய மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோகன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகை சோதனையிட்டபோது அந்த படகில் 400 கிலோ கஞ்சா பொட்டலங்கள் (ரூ. 1 கோடி இந்திய மதிப்பு) பதுக்கி வைத்திருந்ததை தனிப்படையினர் கைப்பற்றி, 5 பேரைக் கைது செய்தனர். இந்த போதைப்பொருள் நாளை இலங்கைக்கு கடத்தப்படவிருந்தது.

மேலும் 1 படகு (மதிப்பு ரூ.50 இலட்சம்), 4 இருசக்கர வாகனம் (மதிப்பு ரூ.2 இலட்சம்) மற்றும் செல்போன்கள் மொத்த மதிப்பு ரூ.1,52,00,000 கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)


## மணமகள் தேவை

1977, இந்து கௌரவ குடும்பம், திருவோண நட்சத்திரம், 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10150)

077 728 6050

## சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வாகன சாரதி தேவை.

தொடர்பு (10256)

076 287 8655

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி, அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு.(நிலப்பரப்பு)

A32 பிரதான வீதியில் இருந்து 600 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு

077 814 7389, 077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக்கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 107 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

தரகர் தேவையில்லை

ஒரு பரப்பின் விலை 3,50,000/=

பார்வையிடும் நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு

077 814 7389, 077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

ஒரு பரப்பின் விலை 3,00,000/=

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்பு (10253)

077 814 7389, 077 117 8578

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம், புத்தூர், கோப்பாய், நெல்லியடி, கொடிகாமம், மானிப்பாய், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், கிளிநொச்சி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி (C-3785)

0768226240 DHL

## விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தடுப்பூசி போடப்பட்டது.

தொடர்பு (10258)

077 569 7715

074 067 7648

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள கோழி இறைச்சி விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

சம்பளம் 40,000/= இற்கு மேல் (C-3801)

077 023 8493

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கு, பலாலி வீதி, வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் இருந்து 50m தூரத்தில் உள்ள 8 பரப்பு காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும். (கனேசா வித்தியாயத்திற்கு அருகில்)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (10222)

[illegible] 1045

## விற்பனைக்கு

14 அடி நீளமான அலுமினிய லொறி Body, பனை மரக் கூரையிலான அஸ்பெட் சீற் போட்ட 28' x 28' கொட்டகையும் இரும்பு கேடர் பொருத்தப்பட்ட அனோமா சீற் 20'x 20' கொட்டகையும் டிப்பர் வாகன 20' நீளமான கொம்பிளேட் செஸியும் 27 அடி செசியும் லான்மாஸ்டருக்கு ஏற்ற பின் டிப்ரெஞ்சலும்(250ELF) விற்பனைக்கு உண்டு. (101.1)

074 260 4160


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.